# ஓரணியில் தமிழ்நாட்டை உருவாக்க உடன்பிறப்பே வா!

## ‘உங்களில் ஒருவன்’ கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

> **‘மக்களிடம் செல்’ என்று பேரறிஞர் பெருந்தகை அறிவுறுத்திய வகையில், அரை நூற்றாண்டு காலம் இந்த இயக்கத்திற்குத் தலைமை தாங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் மொழி - இன - சமுதாய முன்னேற்றத்திற்கான இயக்கமாகக் கழகத்தை வளர்த்தெடுத்தார். பேரறிஞர் அண்ணாவும் தலைவர் கலைஞரும் வகுத்த பாதையில் நம் பயணம் தொடர்கிறது. கொரோனா பேரிடர் காலத்திலும் கழகத் தொண்டர்கள் முடங்கிக் கிடக்காமல், ‘ஒன்றிணைவோம் வா’ என்று களப்பணியாற்றிய நெஞ்சுரம் மிக்கவர்களாக இருந்தார்கள். அதனால்தான் கழகத்தின் மீதான தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.**

‘மக்களிடம் செல்’ என்று பேரறிஞர் பெருந்தகை அறிவுறுத்திய வகையில், அரை நூற்றாண்டு காலம் இந்த இயக்கத்திற்குத் தலைமை தாங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் மொழி - இன - சமுதாய முன்னேற்றத்திற்கான இயக்கமாகக் கழகத்தை வளர்த்தெடுத்தார். பேரறிஞர் அண்ணாவும் தலைவர் கலைஞரும் வகுத்த பாதையில் நம் பயணம் தொடர்கிறது.

கொரோனா பேரிடர் காலத்திலும் கழகத் தொண்டர்கள் முடங்கிக் கிடக்காமல், ‘ஒன்றிணைவோம் வா’ என்று களப்பணி யாற்றிய நெஞ்சுரம் மிக்கவர் களாக இருந்தார்கள். அதனால்தான் கழகத்தின் மீதான தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

மக்களுக்கான திராவிட மாடல் அரசின் திட்டங்களும் சாதனைகளும் 2026-ஆம் ஆண்டிலும் வெற்றிகரமாகத் தொடர்ந்திட ஜூலை 1 முதல் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற உறுப்பினர் சேர்ப்புத் திட்டத்துடனான மாபெரும் பரப்புரைப் பயணத்தை உங்களில் ஒருவனான நான் தொடங்கி வைக்கிறேன்.

தமிழ்நாட்டுக்கான திட்டங்களைப் புறக்கணித்து, தமிழ்ப் பண்பாட்டின் பெருமையை நிராகரித்து, தமிழ் மொழி வளர்ச்சிக்கு நிதி வழங்காமல் வஞ்சித்து, தமிழ்நாட்டு மக்களிடையே மதவாதப் பிரிவினையை உருவாக்க நினைப்பவர்களுக்கும், அவர்களுக்குத் துணைபோகிற துரோகிகளுக்கும் தமிழ்நாட்டில் இடமில்லை என்பதை மக்கள் உறுதி செய்யும் வகையில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ முன்னெடுக்கப்படுகிறது.

இதற்கான செயலியை அறிமுகம் செய்து, 234 தொகுதிகளிலும் அதனை நடைமுறைப்படுத்தும் வகையில் கழக அமைப்புச் செயலாளர் சகோதரர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் முன்னிலையில், கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் - மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி.ராஜா ஜூன் 25 அன்று அண்ணா அறிவாலயத்தில் சிறப்பான முறையில் பயிலரங்கை நடத்தியிருக்கிறார்.

இதில் பயிற்சி பெற்றுள்ள தகவல் தொழில்நுட்ப அணியின் நிர்வாகிகள், 234 தொகுதிகளிலும் உள்ள 68 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குச்சாவடிகளில் நியமிக்கப்பட்டுள்ள கழகத்தின் இளம் நிர்வாகிகளுக்கு பயிற்சியளித்து, மாவட்ட - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் நிர்வாகிகள் வழிகாட்டுதலுடன் அவரவர் வாக்குச்சாவடிக்குப்பட்ட வீடு வீடாகச் சென்று, மக்களை நேரில் சந்தித்து, திராவிட மாடல் அரசின் திட்டங்களால் அந்தக் குடும்பம் பெற்றுள்ள பயன்களை உறுதி செய்து, ஓரணியில் தமிழ்நாட்டைக் கட்டமைக்கும் பணியை மேற்கொள்ளவிருக்கிறார்கள்.

மாநிலக் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் இந்தியாவில் வேறெந்த இயக்கமும் செய்யாத அளவில் 68 ஆயிரத்துக்கும் அதிகமான டிஜிட்டல் வீரர்கள் கொண்ட கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. கழகத்தின் தொண்டர்கள் தமிழ்நாட்டு மக்களைக் கொண்டு ஓரணியில் தமிழ்நாட்டைக் கட்டமைப்பார்கள்.

இந்தச் செயல்திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவது குறித்து ஆலோசனைகளை வழங்கிட இன்று ஜூன் 28 மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் - சார்பு அணிச் செயலாளர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் ஆகியோருடனான காணொலிக் கூட்டம் நடைபெறுகிறது.

ஓரணியில் தமிழ்நாட்டை ஒருங்கிணைப்பதில் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் தங்களை இணைத்துக் கொண்டு, புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதிலும், கழக அரசின் சாதனைத் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வதிலும், 2026-இல் மீண்டும் கழக ஆட்சியை அமைப்பதிலும் முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என உங்களில் ஒருவன் என்ற முறையில் அன்பு கலந்த உரிமையுடன் வலியுறுத்துகிறேன்.

**தொண்டர்களையும் பொது மக்களையும் அரவணைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாதை தெளிவானது. பயணம் உறுதிமிக்கது. இடையூறுகள் - அவதூறுகள் எதுவாக இருந்தாலும் அவற்றை முறியடித்து கடக்கும் வலிமை கொண்டது. பெருமைமிக்க கழகத்தின் உடன்பிறப்பே வா! உன்னால் உருவாகும் ஓரணியில் தமிழ்நாடு!**

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
ஆனி 14
28-06-2025.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (28.6.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக கழக நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்துப் பேசினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.06.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் குடமுழுக்கு விழா வருகிற ஜூலை மாதம் 7 ஆம் தேதி நடைபெறுவதையொட்டி, திருச்செந்தூர் கோவிலுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக அமைக்கப்பட்டு வரும் உணவுக் கூடங்கள், வாகனங்கள் நிறுத்துமிடம், தங்கும் விடுதிகள் மற்றும் கோவில் பிரகாரம் ஆகியவற்றை அமைச்சர் பி.கே.சேகர்பாபுவுடன் இணைந்து கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆய்வு மேற்கொண்டார். உடன் அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### மனித – வனஉயிரின மோதலைத் தவிர்க்க கண்காணிப்பு – நடவடிக்கை!

### தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட

# 1633 வனக் காவலர்கள் - வனக் காப்பாளர்களுக்குப் பணி ஆணைகள்!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 29-

வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன் அவர்களின் செய்திக்குறிப்பு வருமாறு:-



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 05.06.2025 அன்று தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 1633 வனக்காவலர்கள் மற்றும் வனக்காப்பாளர்கள் தமிழ்நாடு வனத்துறையில் காலியிடமாக இருந்த பணியிடங்களில் ஆணை வழங்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். வன விலங்குகள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களை கண்டறிந்து வனக்காவலர்கள் மற்றும் வனக்காப்பாளர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டு மாவட்ட வன அலுவலர்கள் மற்றும் வனச்சரக அலுவலர்களின் மேற்பார்வையில் மனித வன உயிரின மோதலைத் தடுக்கும் வகையில் தொடர் கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும், மக்கள் வசிக்கும் பகுதியில் வனவிலங்குகள் நுழைவதைத் தடுப்பதற்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எதிர்பாராத நிகழ்வுகளால் வன விலங்குகளால் தாக்கப்பட்டு எவரேனும் உயிரிழந்தால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு உடனடியாக இழப்பீட்டுத் தொகையாக ரூ.10 இலட்சம் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

சமீபத்தில் வால்பாறை வனச்சரகத்திற்குட்பட்ட பச்சமலை எஸ்டேட் தொழிலாளர் குடியிருப்பு பகுதியில் சிறுத்தை ஒன்று அப்பகுதியைச் சேர்ந்த சுமார் 5 வயது மதிக்கத்தக்க சிறுமி செல்வி ரோஷினி குமாரி என்பவரை தாக்கியதில் உயிரிழந்தார். உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ள நிவாரணத் தொகை ரூ.10 இலட்சம் உடனடியாக வழங்கப்பட்டு, சிறுமியின் குடும்பத்திற்கு வருத்தம் தெரிவித்து, ஆறுதல் கூறப்பட்டது.

மேலும், பொதுமக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் வனத்துறையினரால் மனித வன உயிரின மோதல் தடுப்புக் குழுவினை கூடுதலாக நியமித்து வன உயிரினங்களின் நடமாட்டத்தைத் தொடர்ந்து கண்காணித்து, சிறுமியைத் தாக்கிய சிறுத்தையை கூண்டு வைத்து பிடித்து அடர்ந்த வனப்பகுதியில் விடப்பட்டுள்ளது. மேலும், மனித வன உயிரின மோதல் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் தொடர்ந்து கண்காணிப்பு பணியினை தீவிரப்படுத்தி, அனைத்து விதமான நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ‘வாட்டர் பெல்’ திட்டம்! அடுத்த வாரம் முதல் அமல்!

சென்னை, ஜூன் 29–

பள்ளிக் கல்வித்துறை அனைத்து மாவட்ட தலைமை கல்வி அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளது. அதில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்து பள்ளிகளிலும், மாணவர்கள் தண்ணீர் குடிக்க 5 நிமிட இடைவெளி அளித்து, பள்ளி நேரங்களில் நினைவூட்டும் வகையில் வாட்டர் பெல் அடிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீர்ச்சத்து இழப்பு மாணவர்களின் அறிவாற்றல் செயல்பாடு, கவனம் மற்றும் செயல்திறனை கணிசமாக பாதிக்கும் என்றும், பள்ளிகளில் மாணவர்கள் தண்ணீர் குடிப்பதை ஊக்குவிப்பது ஏராளமான நன்மைகளைத் தரும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாட்டர் பெல் அடித்ததும், வகுப்பறைக்கு உள்ளேயே மாணவர்கள் தண்ணீர் குடிப்பதை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும், இதற்காக 5 நிமிடங்கள் வரை ஒதுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பள்ளிகளில் தண்ணீர் இருப்பதை தலைமை ஆசிரியர்கள் கண்காணிக்க வேண்டும், இதற்கான நடைமுறைகள் பின்பற்றப்படுவதை தலைமை கல்வி அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. அடுத்த வாரம் முதல் அமல் படுத்தப்படும் என பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

### நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர்கள் பணிகள் குறித்த கூட்டம்!

# சாலையின் தரத்தினை பல்வேறு கட்டங்களில் தரக்கட்டுப்பாடு ஆய்வு செய்ய வேண்டும்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவுரை!

சென்னை, ஜூன் 29-

நெடுஞ்சாலைத்துறையின் தலைமைப் பொறியாளர்களின் பணிகள் தொடர்பாக, பொதுப்பணிகள், நெஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஆய்வு செய்து சில அறிவுரைகள் வழங்கினார்.



சென்னை தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (27.06.2025) பொதுப்பணிகள், நெஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர்களின் பணிகள் குறித்து ஆய்வு செய்து சில அறிவுரைகள் வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நெடுஞ்சாலைத்துறையைச் சார்ந்த அனைத்து தலைமைப் பொறியாளர்களும் கலந்து கொண்டனர். தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கோட்டப் பொறியாளர்களுடன் தலைமையிடத்தில் மாதம் ஒருமுறை பணி முன்னேற்றம், விரிவானத் திட்ட அறிக்கை தயாரிக்கும் கோப்புகள், நிலஎடுப்பு, நீதிமன்ற வழக்குகள் போன்ற முக்கியப் பணிகளை ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

தலைமைப் பொறியாளர்கள் ஆய்வு கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக, கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள், உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்களுடன், கண்காணிப்புப் பொறியாளர்கள் ஆய்வு நடத்த வேண்டும். அதேபோன்று, கோட் டப் பொறியாளர்களும் சம்மந்தப்பட்ட களப்பொறியாளர்களுடன் தணிக்கை நாள் ஆய்வுக் கூட்டம் நடத்த வேண்டும். இதனை கண்காணிப்புப் பொறியாளர்கள் ஆய்வு நடைபெறுகிறதா என்பதை உறுதி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மேலும், தலைமைப் பொறியாளர் ஒரு மாதத்தில், குறைந்தப்பட்சம் 10 நாட்களுக்கு களஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டார்.

வேலை தளத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதாவது, சாலைகள் குறுக்கே பாலங்கள் கட்டும்போது, போதிய தடுப்புகள் (Barricades) வலிமையாக அமைக்கப்பட வேண்டும். இரவில், ஒளிரும் ஸ்டிக்கர்(Sticker) மற்றும் ஒளிரும் பிரதிபலிப்புப் பதாகைகள் வைக்கப்பட வேண்டும். கவனக் குறைவு மற்றும் கடமையில் அலட்சியமாக செயல்பட்டால், சம்மந்தப்பட்ட பொறியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

சாலையின் தரத்தினை பல்வேறு கட்டங்களில், தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், முத்திரைத் திட்டங்கள் (Iconic Scheme) குறித்து, 15 நாட்களுக்கு ஒருமுறை அரசுக்கும், செயலாளர் அவர்களுக்கும் பணியின் முன்னேற்ற அறிக்கையினை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தேனாம்பேட்டை - சைதாப்பேட்டை வரை உயர்மட்டப் பாலம், மதுரை அப்போலோ பாலம், மதுரை இராஜாஜி சந்திப்பு அருகே பாலம் போன்ற முக்கியமான பணிகளை தனிக் கவனம் செலுத்தி விரைந்து முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

புறவழிச் சாலைகள் அமைக்க அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டும், சில புறவழிச்சாலைப் பணிகள் நிறைவுபெறாமல் உள்ளது. இதில், தலைமைப் பொறியாளர்கள் உரிய கவனம் செலுத்தவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

சாலை உபகரணங்கள், IRC விதி முறைகளுக்குட்பட்டு, தேவையான இடங்களில் மட்டும் அமைக்க வேண்டும் என்று அறிவுறுத்திய அமைச்சர் அவர்கள், சாலை இருபுறமும் படர்ந்துள்ள முட்புதர்களை அகற்ற வேண்டுமென்றும், பள்ளமில்லா சாலைகளாகப் பராமரிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.